

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 9, 17, 18, 19 , 25, ஆகிய வார்டுகளில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் தார் சாலை அமைக்க பணிகள் தொடக்க விழா நடைபெற்றது. இதில் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சாலை அமைக்கப் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் நகர் மன்றத் தலைவர் உஷா ராணிரவி, ஆணையர் கீர்த்தனா, நகர செயலாளர் தி.வை.ரவி, கே. ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, நிவேதா ஜெசிகா, டி.தேசிங்கு, எஸ்.ஜெயபாலன், கே.சுரேஷ்குமார், ஜெ.அன்பழகன், ரவி, சி.கமலக்கண்ணன், தி.வை.சுரேஷ், சரவணன், சலீல், தங்கமணி, ரவிச்சந்திரன், பி.எல்.ஆர்.யோகா, பால்ராஜ், வெங்கடேசன், மேகநாதன், முரளி பாஸ்கரன் , செந்தில்வேலன், பாபு , கிருஷ்ணன் , உஷாராணி வெங்கடேசன், பட்டாணி கார்த்திக், பிரசன்னா, வீ.மகேஷ்குமார், உள்பட பலர் உள்ளனர்.



ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டத்திற்கான 2026 சட்டமன்ற தேர்தல் பயிற்சி பாசறை கூட்டம் ஒருங்கிணைந்த மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் பி.கே.நாகராஜ், பெ.வினோத், எஸ்.கோபி ஏற்பாட்டில் திருவள்ளூரில் நடைபெற்றது. திமுக சட்டத்துறை செயளாலர் என்.ஆர்.இளங்கோ எம்பி 2026 சட்ட மன்ற தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கி பயிற்சி அளித்தார் இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழக்கறிஞர்களுக்கு உறுப்பினர்கான அடையாள அட்டை வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் எம்எல்ஏ, வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி , டி.ஜெ.கோவிந்தராஜன், மண்டல பொறுப்பாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு, உள்பட திருவள்ளூர் மேற்கு, மத்திய கிழக்கு மாவட்டகத்திற்கு மாநில மாவட்ட நிர்வாகிகள் உட்பட்ட மாநகர ஒன்றிய, நகர, பகுதி பேரூர், செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞர் அணி மற்றும் நீதிமன்ற நிர்வாகிகள், சிஎல்சி, யுஎல்சி, டிஎல்சி, எப்எல்சி வழக்கறிஞர்கள், மூத்த, இளைய வழக்கறிஞர்கள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விருதுநகர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணகுமார் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சிவகாசி மாநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | பகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 28.06.2025 | பகுதி – 1 | எஸ்.ஆர்.என். பள்ளி அருகில் | சிவகாசி ஜீவா<br>மு.இராமச்சந்திரன் |
| 2 | | பகுதி – 2 | அம்பேத்கர் சிலை அருகில் | சிவகாசி ஜீவா<br>மு.இராமச்சந்திரன் |
| 3 | | பகுதி – 3 | கலைமகள் பள்ளி பின்புறம்,<br>புத்துக்கோவில். | சிவகாசி ஜீவா<br>மு.இராமச்சந்திரன் |
| 4 | 29.06.2025 | பகுதி – 4 | அய்யப்பன் குடியிருப்பு<br>38–வது வார்டு | சிவகாசி ஜீவா,<br>செ.முகம்மத் அன்ஸார் |
| 5 | | பகுதி – 5 | தேவர் சிலை, சிவகாசி. | சிவகாசி ஜீவா<br>செ.முகம்மத் அன்ஸார் |
| 6 | | பகுதி – 6 | ஏ.வி.டி. பள்ளி எதிரில், சிவகாசி. | சிவகாசி ஜீவா<br>செ.முகம்மத் அன்ஸார் |

**சிவகாசி**

நாள் : 23.06.2025

கலைஞர் 100
1924 - 2023



## சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. தொண்டர் அணி

# துணை அமைப்பாளர் இரா.முருகன் இல்லத் திருமணம்! அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர் - கோவி செழியன் வாழ்த்து!

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. – இரா.கிரிராஜன் எம்.பி. – டி.கே.எஸ்.இளங்கோவன் – காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. – பெ.சேகர் பங்கேற்பு!

சென்னை, ஜூன். 24-

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. தொண்டர் அணி துணை அமைப்பாளர் இரா.முருகன் இல்லத் திருமணம் 26.6.2025 வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு மேல், ஸ்ரீகணேஷ் மஹால், எண்.17, விசுவாஸ் நகர் மெயின் ரோடு, மதுரவாயல், சென்னை - 95ல் திருமண வரவேற்பும், 27.6.2025 காலை 6 மணி முதல் 7.30 மணியளவில் திருமணமும் நடைபெற உள்ளன.

இம்மணவிழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர், வட சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மாநிலங்கவை உறுப்பினர் இரா. கிரிராஜன், கழகச் செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, ஆர்.கே.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, கழகத் தொண்டர் அணி மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் இராயபுரம் கிழக்குப் பகுதி செயலாளர் இரா.செந்தில், சென்னை வடக்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் கே.கலையரசன், 51ஆவது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், ரெயின்போ என். விஜயகுமார், விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி. பங்கேற்கின்றனர்.

## குஜராத், கேரளா, மேற்கு வங்கம், பஞ்சாப் மாநிலங்களின்

# இடைத் தேர்தல் முடிவுகள் : பா.ஜ.க.வுக்கு பெரும் பின்னடைவு !

லூதியானா, ஜூன் 24 -

4 மாநிலங்களில் நடைபெற்ற இடைத் தேர்தலில் பாஜகவுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் காடி, விசாவதர் ஆகிய 2 பேரவை தொகுதிகள், கேரளாவில் நிலாம்பூர் பேரவை தொகுதி, பஞ்சாப்பில் லூதியானா மேற்கு பேரவை தொகுதி மற்றும் மேற்குவங்கத்தில் காளிகஞ்ச் பேரவை தொகுதி ஆகிய 5 தொகுதிகளில் கடந்த 19ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி இன்று காலை தொடங்கி நடைபெற்று வருகிறது. வாக்கு எண்ணிக்கையின் படி, குஜராத், கேரளா, மேற்கு வங்கம், பஞ்சாப் மாநிலங்களில் பாஜகவுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

5 தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 2 இடங்களில் ஆம் ஆத்மி முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ், பாஜக மற்றும் TMC தலா ஒரு இடத்தில் முன்னிலை வகிக்கிறது. கேரளாவின் நிலம்பூர் தொகுதியில் 10,792 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. பாஜக 4வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தின் காளிகஞ்ச் தொகுதியில் 20,000 வாக்குகள் வித்தியாசத்தில் திரிணாமுல் காங்கிரஸ் முன்னிலையில் உள்ளது. அங்கு பாஜக மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநிலம் லூதியானா தொகுதி இடைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி முன்னிலையை தொடர்ந்து பாஜக 3ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. குஜராத்தில் 2 தொகுதிகளில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஒரு தொகுதியில் பாஜகவும், மற்றொரு தொகுதியில் ஆம் ஆத்மியும் முன்னிலை வகிக்கின்றன.

## பெரம்பூர் 45-வது வட்டக் கழகத்தினருக்கு வட்டச் செயலாளர் ஜி.மாரிமுத்து வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 24 -

பெரம்பூர் 45-வது வட்டக் கழகத்தினருக்கு வட்டச் செயலாளர் ஜி.மாரிமுத்து விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப் படி, சென்னை வடக்கு மாவட்ட கழக சார்பில் பாக முகவர்கள் கூட்டம் தேர்தல் மண்டல பொறுப்பாளர் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி தலைமையில் இன்று (24-6-2025 செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் தண்டையார்பேட்டையில் அமைந்துள்ள தங்கம் திருமண மண்டபத்தில் பாக முகவர்கள் கூட்டம் (B L A 2) நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பெரம்பூர் தெற்கு பகுதி 45 வது வட்டத்திற்கு உட்பட்ட

பாக முகவர்கள் (B L A2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். பொருள். கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு வட்டச் செயலாளர் முரசொலி ஜி.மாரிமுத்து கேட்டுக்கொண்டுள்ளார்.

## திருவொற்றியூரில் – மீன்பிடிக்கும் போது இறந்த

# மீனவர் குடும்பத்திற்கு ரூ.1 லட்சம் நிதியுதவி!

### கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜூன் 24-

திருவொற்றியூரில் மீன்பிடிக்கும் போது இறந்த மீனவர் குடும்பத்திற்கு கழக மீனவரணி சார்பில் ரூ.1 லட்சம் நிதியுதவி மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பலகை தொட்டி குப்பத்தை சேர்ந்த சுப்பிரமணி (வயது 51) என்பவர் கடந்த 18-ஆம் தேதி அன்று அதிகாலை கடலில் மீன் பிடித்துவிட்டு, காலை கரை திரும்பியபோது கடல் அலை சீற்றத்தால் படகு கவிழ்ந்தது.

இதில் மயக்கம் அடைந்த மீனவர் சுப்பிரமணியை சக மீனவர்கள் மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

இதனை அறிந்து திருவொற்றியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, பிறகு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர், பிறகு அவரது உடல் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனை அறிந்த திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மீனவரணி துணை தலைவருமான கே.பி. சங்கர் உயிரிழந்த சுப்பிரமணி உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்த சுப்பிரமணியன் குடும்பத்தாருக்கு மாநில மீனவரணி சார்பில் ரூபாய் 1 லட்சம் நிதி உதவி வழங்கினார்.

வடகிழக்கு மாவட்ட மீனவர் அணி செயலாளர் கே. தேசிங்கு, துணை செயலாளர்கள் டி.மகேந்திரன், எஸ். செல்வம், குமரன், பலகை தொட்டி குப்பம் கிராம நிர்வாகிகள் ராமச்சந்திரன், மதுரை முத்து, ஜோதி, ராஜேந்திரன் மற்றும் கிராம பொதுமக்கள் உடன் இருந்தனர்

## திருவொற்றியூர் கிழக்குப் பகுதிக்குட்பட்ட

# வட்டச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜூன் 24 -

திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி வட்ட செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் இன்று (24.6.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அவர்களின் ஏற்பாட்டில் அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் வட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெறும். ஆகையால் வட்ட செயலாளர் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்டு கொள்கிறேன்,

பொருள் 27.6.2025 அன்று பாக முகவர்கள்,

BLA 2 B.D.A. ஆகியோருக்கு பயிற்சி கூட்டம் நடைபெறுவது குறித்து,

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு தெரிவித்துள்ளார்.

## புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்

# செம்மொழி நாள் விழா- முதியோர் காப்பகத்தில் நல உதவிகள்

### கே. கருணாகரன், சி. மூர்த்தி, சி.பாலாஜி பங்கேற்பு

சென்னை, ஜூன் 24 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதியில் முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 17வது வட்டம் தீயம்பாக்கம் டீ கப் மினிஸ்ட்ரீஸ் முதியோர் காப்பகத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு, மதிய உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, வட்டக் கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், பாக முகவர் டி. திவாகர், எம். ஜான்சன், இ. சுதர்சன், எஸ். ஜோசப் ஜி. பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதியோர் காப்பகத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு அறுசுவை பிரியாணி மற்றும் அத்தியாவசிய பொருட்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முதியோர்கள் அனைவரும் தங்களுக்கு நல உதவிகள் வழங்க உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் என். நாகராஜன், ஜி. கார்த்திக், வி. சுமிர், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், கே. சண்முக பிரியன், டி. வினோத், ஜி. ராஜ்குமார், எஸ். நாகராஜ், வட பெரும்பாக்கம் எம். மைக்கேல், இ. கார்த்திக், பி. செந்தில், எம். கோவிந்தன், விநாயகபுரம் கமலநாதன், சின்னத்தோப்பு முனிவேல், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



பம்மல் வடக்கு பகுதி, திருநீர்மலை 30 வது வட்ட பாக முகவர்கள் செயல்வீரர்கள் கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி சிறப்புரையாற்றினார். இதில் தாம்பரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், பகுதி கழகத்தின் அவை தலைவர் கே.சந்திரன், துணை செயலாளர் மு.ஸ்ரீதர், மாநகரப் பிரதி இரா.பாபுஜி, வட்ட கழக செயலாளர் இ.பாலாஜி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 17 வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் உள்ள டீ கப் மினிஸ்டரிஸ் முதியோர் காப்பகத்தில் மதிய உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டன. 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில், சி. மூர்த்தி, சி.பாலாஜி, எம். என்.அஜய் தென்னவன், டி. திவாகர், எம். ஜான்சன், இ. சுதர்சன்,எஸ்.ஜோசப், ஜி.பூபாலன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.